# ஈரோடு மாநகராட்சி
# மாமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்
# திருவள்ளுவராண்டு 2046 ஆடித் திங்கள் 27–ம் நாள்

**2015–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் தேதி (12.08.2015) புதன் கிழமை மதியம் 3.30 மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மாமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

*****

**1) மரியாதைக்குரிய துணை மேயர் திரு. கே.சி. பழனிசாமி அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**

- ஈரோடு வட்டம், 9 சூரியம்பாளையம் 'அ' கிராமத்தில் 169/2,4,6 222/2, 242/1 ஆகிய புல எண்களில் வீடற்ற ஏழை, எளியவர்களுக்கு வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஜாதியினரைச் சேர்ந்த இணைப்பில் கண்டுள்ள நபர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கிட ஆட்சேபனை இல்லை என இம்மாமன்றம் தனது ஒத்திசைவினை தெரிவித்துக் கொள்ள தீர்மானிக்கிறது.

**183. மரியாதைக்குரிய துணை மேயர் திரு. கே.சி. பழனிசாமி அவர்கள் முன்மொழிய மாண்புமிகு மேயர் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**2)** ஈரோடு மாவட்ட ஆட்சியரின் குடியிருப்பு மற்றும் முகாம் அலுவலகம் தற்போது அமைந்துள்ள இடத்தில் போதுமான இட வசதி இல்லாமல் உள்ளதால் இம்முகாமிற்கு வரும் வாகனங்கள் நிறுத்துவதற்கும் இடவசதி இல்லாமல் உள்ளது. மேலும் முகாம் அலுவலகத்திற்கு அருகிலேயே ஈரோடு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் ஈரோடு மாவட்ட முதன்மை நீதிபதி ஆகியோர்களின் குடியிருப்பும் அமைந்துள்ளதால் வாகனங்கள் நிறுத்துவதற்கு போதுமான இடமில்லை.

எனவே, மாவட்ட ஆட்சியரின் முகாம் அலுவலகத்தை தற்போது மாவட்ட வருவாய் அலுவலர் குடியிருப்பு அமைந்துள்ள இடத்திற்கு மாற்றவும் இதனை ஒட்டியுள்ள இடத்தினை மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலக வாகன நிறுத்துமிடமாக பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதால், மாவட்ட வருவாய் அலுவலருக்கு குடியிருப்பு கட்டுவதற்கு தகுதியான நிலம் ஈரோடு வட்டம், ஈரோடு 'அ' கிராமம் ரீ.ச.எண்.415/1A1-ல் 15504 சதுரடி நிலம் 'பிறபயன்பாடு' என வகை செய்யப்பட்டு ஈரோடு மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட நிலம் கண்டறியப்பட்டுள்ளதால் மேற்படி நிலத்தை ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலரின் குடியிருப்பு அமைப்பதற்கு ஒதுக்கீடு செய்வதற்கு மாமன்றத்தின் இசைவினை பெற்று வழங்கக் கோரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஈரோடு

அவர்களின் கடிதம் ந.க.எண்.18751/2014/எல்.5 நாள்.17.04.2015 கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இம்மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட மேற்படி இடமானது, ஈரோடு மாநகராட்சி வீரப்பன்சத்திரம் (R.S.No.393B) புலஎண்.415/1A1-ல் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் 44.33 ஏக்கரில் மனைப்பிரிவு செய்து நகர ஊரமைப்புத்துறையினரால் L.P.R(C.N) No.228/83-ல் திருத்திய மனைப்பிரிவு ஒப்புதல் பெறப்பட்டு இதில் பொது உபயோகம், பூங்கா மற்றும் திறவிடங்களுக்கு 10% பரப்புள்ள இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதில் மேற்குறிப்பிட்ட இடம் இம்மனைப்பிரிவின் பொதுமக்களின் பொது உபயோகத்திற்காக [R-31] மேல்நிலைத்தொட்டிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதாகும்.

அரசாணை எண்.730, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள்.14.04.1976ல் மாநகராட்சி மற்றும் நகராட்சிக்கு சொந்தமான அசையாச் சொத்துக்களை வழங்க தடையாணை விதித்துள்ளது. ஆனால் அரசாணை (நிலை) எண்.25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.25/02/2000–ல் அரசாணையில் நகராட்சி மற்றும் மாநகராட்சிக்கு சொந்தமான பட்டா நிலமாக இருக்குமேயானால் அது எந்த அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனத்திற்கு தேவையானாலும் அதனை அப்போதைய சந்தை மதிப்பு [Market value at the time] அடிப்படையில் தான் கொடுக்க வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளது.

மேலும், சென்னை உயர்நீதிமன்ற பேராணை எண்.9956/2000& 45/2003–ன் தீர்ப்பாணை நாள்.12/04/2007–ல் எந்தவொரு மனைப்பிரிவிலும் பொது உபயோத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தை வேறு பயன்பாட்டிற்கு மாற்றக்கூடாது எனவும் W.A.No..38/& 39/2010 நாள்.23.11.2010 உத்தரவில் மனைப்பிரிவு அனுமதிக்கும் நேர்வில் ஏற்கனவே ஒதுக்கீடு செய்த பயன்பாட்டை மாற்ற விதி இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், ஈரோடு அவர்களின் கடிதம் எண்.L.A.I/10506/82 நாள்.06.09.1990–ன் வாயிலாக அப்போதைய செயல்அலுவலர், வீரப்பன்சத்திரம் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு தற்போது ஈரோடு மாநகராட்சிக்குச் சொந்தமான ஈரோடு வட்டம், ஈரோடு 'அ' கிராமம் ரீ.ச.எண்.415/1A1-ல் இம்மனைப்பிரிவு பொதுமக்களின் பொதுஉபயோகத்திற்காக (R31) மேல்நிலைத்தொட்டிக்கு ஒதுக்கீடு செய்துள்ள 15504 ச.அடி இடத்தில் மாவட்ட வருவாய் அலுவலரின் குடியிருப்பு அமைக்க 7000 ச.அடி நிலத்தை ஒதுக்கீடு செய்து தரக்கோரியுள்ளமையால், முக்கியத்துவம் கருதி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையின்படி நிலமாற்றம் தொடர்பான கருத்துருவை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் வழியாக அரசுக்கு சமர்ப்பிக்க மாமன்றத்தின் பரிசீலணைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**இ3/2678/15**

**184.** **இம்மாநகராட்சிக்குச் சொந்தமான ஈரோடு வட்டம், ஈரோடு "அ" கிராமம் ரீ.ச.எண்.415/1A1/ல் இம்மனைப் பிரிவு பொதுமக்களின் பொது உபயோகத்திற்காக (R31) மேல்நிலைத் தொட்டிக்கு ஒதுக்கீடு செய்துள்ள இடத்தில் 7000 சதுரஅடி நிலத்தை மாவட்ட வருவாய் அலுவலரின் குடியிருப்பு கட்ட ஒதுக்கீடு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கோரிக்கையின்படி நிலமாற்றம் செய்வது தொடர்பான கருத்துருவை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் வழியாக அரசுக்கு அனுப்பி வைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**3)** இம்மாநகராட்சி மண்டலம்–2 வார்டு எண்.22–ல் சம்பத் நகர் மெயின் பகுதியில் உள்ள நீர் உந்து நிலையத்தின் எதிர்புறம் உள்ள பஸ் நிறுத்தத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ஒரு பயணிகள் நிழற்குடை மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேற்படி பயணிகள் நிழற்குடையினை பராமரித்து செய்து புதுப்பித்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தரவும், தொடர்ந்து அவ்வப்போது பராமரித்து பணிகள் செய்து வரவும், சம்பத் நகர், அம்மன் மெட்ரிக்குலேசன் பள்ளி அனுமதி வழங்கும்படி **09.06.2015**–ம் தேதிய கடிதத்தில் அனுமதி கோரியுள்ளார்கள்.

மேற்படி சம்பத் நகர் பயணிகள் நிழற்குடை புதுப்பித்து அமைக்கும் பணி தங்கள் சொந்த செலவில் மற்றும் வருடம் தோறும் அந்த நிழற்குடைக்கான பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் இசைவு தெரிவித்துள்ளார்கள். இவ்விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

**அலுவலகக் குறிப்பு–**

மாமன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.

**இ1/1523/15**

**185. இம்மாநகராட்சி வார்டு 22 சம்பத் நகர் மெயின் பகுதியில் உள்ள நீர்உந்து நிலையத்தின் எதிர்புறம் உள்ள பஸ் நிறுத்தத்தில் உள்ள பயணிகள் நிழற்குடையினை பராமரிப்பு பணிகள் மற்றும் வருடந்தோறும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அம்மன் மெட்ரிக்குலேசன் பள்ளிக்கு அனுமதி வழங்கலாம்.**

## 4) 14–வது மாமன்ற உறுப்பினர் திரு. எஸ். உதயகுமார் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்

- கலைஞர் நகர் பகுதியில் 4 இன்ச் பைப் அமைக்கப்பட்டுள்ளது. மேடான பகுதிகளுக்கு குடிநீர் வருவதில்லை. ஆகையால் 6 இன்ச் பைப்பாக மாற்றித் தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**186. 14ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எஸ். உதயகுமார் அவர்கள் முன்மொழிய 15ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. க. அண்ணாமலை அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

## 5) 33–வது மாமன்ற உறுப்பினர் திருமதி. ஜி. ராதா அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்

- காரப்பாறை பார்த்திபன் வீடு முதல் திருமூர்த்தி வீடு வரை, பரமசிவம் வீடு முதல் பழனிச்சாமி வீடு வரை, கணேசன் வீடு முதல் யீதர் வீடு வரை, மாணிக்கம் வீடு முதல் கழிப்பிடம் ரோடு வரை, மாதம்மாள் வீடு முதல் பழனி வீடு வரை ஆகிய 5 இடங்களில் புதிய கான்கிரீட் சாலை அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- காரப்பாறையில் ஏற்கனவே உள்ள பழுதடைந்துள்ள ஆறு கான்கிரீட் சாலைகளை பராமரித்து புதியதாக மாற்றி கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- காரப்பாறையில் விளையாட்டு திடல் மற்றும் நூலகம் புதியதாக ஏற்படுத்திக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- காரப்பாறையில் சமுதாய கூடம் ஒன்று அமைத்து கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- காரப்பாறை முருகேஷ் வீடு முதல் சென்ட்ரிங் முருகன் வீடு வரை புதிய தார்சாலை மற்றும் கழிவுநீர் வடிகால் வசதி ஏற்படுத்திக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- காரப்பாறையில் பிரதான சாலையில் 6 இடங்களில் வேகத்தடை ஏற்படுத்திக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- காரப்பாறை பள்ளி அருகில், ராஜகோபால் வீடு அருகில், காரப்பாறை டிரான்ஸ்பார்மர் அருகில், மதுரை வீரன் கோயில் ஆகிய 4 இடங்களில் 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் தொட்டி அமைத்து குடிநீர் வசதி செய்து கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- புதுக்காலனியில் பிரதான சாலையில் 5 இடங்களில் வேகத்தடை ஏற்படுத்திக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- புதுக்காலனியில் புது தாதி வீடு அருகில், விநாயகர் கோயில் அருகில், ரமாபிரபா வீடு எதிரில், மஜித் பின்புறம் ஆகிய 4 இடங்களில் 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் தொட்டி அமைத்து குடிநீர் வசதி செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ஈஸ்வரன் வீடு முதல் சின்னச்சாமி வீடு வரையில் சாக்கடை வசதி ஏற்படுத்தி கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- புதுக்காலனியில் ருக்மணி வீடு முதல் ஓடை வரையிலும், பாஷாபாய் வீடு முதல் கலைச்செல்வி வீடு வரையிலும், வேடியப்பன் வீடு முதல் சாமிநாதன் வீடு வரையிலும், ராமசாமி வீடு முதல் அருணாசலம் வீடு வரையிலும், திராவிடன் வீடு முதல் சாந்தா வீடு வரையிலும் ஆகிய 5 இடங்களில் புதிய கான்கிரீட் சாலை அமைத்துக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- புதுக்காலனியில் ஏற்கனவே உள்ள கான்கிரீட் சாலைகள் 5 சாலைகள் பழுதடைந்துள்ளது. அதை பராமரிப்பு செய்து புதிய சாலைகளாக மாற்றித் தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- புதுக்காலனியில் உள்ள ஓடை பகுதிக்கு இருபுறமும் தடுப்புசுவர் அமைத்து கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- பி.கே.என். நகரில் உள்ள ரிசர்வ் சைட்டில் புதிதாக ரேசன் கடை கட்டித்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- பி.கே.என். நகரில் இருபுறமும் சாக்கடை வடிகால் வசதி ஏற்படுத்திக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- பி.கே.என். நகர் பகுதியில் பூங்கா அமைத்தும், நூலகம் ஏற்படுத்தியும் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- மெடிக்கல் நகர் நவாப்ஜான் பாய் வீடு முதல் குமார் வீடு வரை இருபுறமும் சாக்கடை வடிகால் வசதி ஏற்படுத்தி புதிய தார்சாலை அமைத்துக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- மெடிக்கல் நகர் பழனிவேல் வீடு முதல் சூரியங்காடு சாலை வரை புதிதாக வடிகால் வசதி அமைத்து தார்சாலை அமைத்துக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- மெடிக்கல் நகர் பகுதிக்கு புதியதாக 8 இடங்களில் தெருவிளக்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- மெடிக்கல் நகர் பகுதியில் பூங்கா அமைத்தும் நூலகம் ஏற்படுத்தியும் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- டி.ஆர்.ஈ நகரில் இருபுறமும் வடிகால் வசதியும் புதிய தார்ச்சாலை அமைத்துக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- அக்ரி நகரில் உள்ள ஆழ்துளை குழாய் கிணற்றில் புதிய மோட்டார் அமைத்து அருகில் உள்ள மேல்நிலை தொட்டிக்கு தண்ணீர் ஏற்றி குடிநீர் வசதி செய்து கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- பிருந்தாவன் நகரில் 3 வீதிகளுக்கும் சாக்கடை வடிகால் வசதி செய்து கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- வித்யா நகரில் அல்லது பிருந்தா நகரில் புதிய ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து அருகில் 10000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் தொட்டி அமைத்து குடிநீர் விநியோகம் செய்து கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- வித்யா நகர் வாய்க்கால் ரோட்டில் ஏற்கனவே உள்ள வடிகாலினை புதுப்பித்து கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- டி.ஆர் கார்டனில் இரண்டு இடங்களில் புதிதாக தார்ச்சாலை வசதியும் மூன்று பழைய தார்ச்சாலைகளை பழுது நீக்கி புதிய தார்சாலைகளாக புதுப்பித்தும், இருபுறமும் வடிகால் வசதி ஏற்படுத்திக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- மேல் திண்டலில் ஒரு ஆழ்துளை குழாய் கிணறு ஏற்படுத்தி அருகில் 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் அமைத்து குடிநீர் விநியோகம் செய்து கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- சக்தி நகரில் உள்ள நுழைவாயிலில் உள்ள கல்வெர்ட்டை அகலப்படுத்தியும், உயரப்படுத்தியும் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- சக்தி நகரில் உள்ள பிரதான சாலையை அகலப்படுத்தியும் 1 மீட்டர் உயரப்படுத்தியும் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- சக்தி நகர் விரிவாக்கம் பகுதியில் உள்ள பிரதான சாலையை இருபுறமும் 1 மீட்டர் வரை அகலப்படுத்தி கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- காமராஜ் நகரில் உள்ள பாலத்தை உயரப்படுத்தியும் அகலப்படுத்தியும் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- பெருந்துறை ரோடு முனியப்பன் கோயில் முதல் சத்யசாய் நகர் வரை உள்ள பகுதியில் வடிகால் வசதி செய்து கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- முருகன் நகர் அருகில் சாலையை ஆகிரமித்து உள்ளனர். ஆக்கிரமிப்பினை அகற்றிக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**187. 33ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. ஜி. ராதா அவர்கள் முன்மொழிய 32ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. வி.பி. இளங்கோ அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**6)** அரசாணை (நிலை) எண்.77 நாள் 13.04.2015 பள்ளிக் கல்வி (ப.க.4(1)த் துறை–ல் நகர மற்றும் ஊரக உள்ளாட்சி மன்றங்களில் அவர்களுடைய அதிகார எல்லைக்குள் உள்ள அனைத்து பள்ளிகளிலும் கழிவறைகளை துப்புரவு செய்ய பொதுவான துப்புரவு முகமை மூலமாகவோ அல்லது அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள துப்புரவு பணியாளர்கள் மூலமாகவோ அல்லது தினக்கூலி பணியாளர்களை நியமனம் செய்வதன் மூலமாக துப்புரவு பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும், அரசாணையின்படி இம்மாநகராட்சி எல்லைக்குள் உள்ள அரசு/நகராட்சி தொடக்க /நடுநிலை/உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள கழிவறைகளை இம்மாநகராட்சி மூலம் பராமரிக்கவும், துப்புரவு பணி மேற்கொள்ளவும், அதற்காகும் செலவினங்களை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**எச்1/5764/15**

**188. அனுமதி வழங்கப்பட்டது.**

**7)** ஈரோடு மாநகராட்சி, குமிளம்பரப்பு கிராமம், ரீ.ச.எண்.120/1பி1 மற்றும் 1பி2–ல், திரு. எம்.கே. செல்லப்பன் மற்றும் எஸ். சிவபாக்கியம் என்பவர்கள் (2429.0 ச.மீ + 1619.33 ச.மீ) 4048.33 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தை, விவசாய உபயோகப் பகுதியிலிருந்து வணிக உபயோகப் பகுதியாக நிலப்பயன்பாடு வகை மாற்றம் செய்யக்கோரி உறுப்பினர் செயலர், ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களுக்கு விண்ணப்பித்ததன்பேரில், உறுப்பினர் செயலர், ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் கடிதம் ந.க.எண்.203/2015 ஈஉதிகு–1, நாள் 15.06.2015–ல் மேற்படி நிலப்பயன்பாடு மாற்றம் தொடர்பாக ஈரோடு மாநகராட்சி மாமன்ற தீர்மானம் அனுப்பி வைக்கும்படி கோரப்பட்டுள்ளது.

எனவே ஈரோடு மாநகராட்சி, குமிளம்பரப்பு கிராமம், ரீ.ச.எண்.120/1பி1 மற்றும் 1பி2–ல் (2429.0 ச.மீ + 1619.33 ச.மீ) 4048.33 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தை, விவசாயப் பகுதியிலிருந்து வணிகப் பகுதியாக நிலப்பயன்பாடு வகைமாற்றம் செய்வதற்கு மாமன்றம் பரிசீலணைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**இ3/5034/15**

**189. ஈரோடு மாநகராட்சி, குமிளம்பரப்பு கிராமம் ரீ.ச.எண்.120/1பி1 மற்றும் 1பி2–ல் திரு. எம்.கே. செல்லப்பன் மற்றும் எஸ். சிவபாக்கியம் என்பவர்க்கு (2429.0 சமீ + 1619.33 ச.மீ) 4048.33 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தை விவசாய பகுதிகளிலிருந்து வணிகப் பகுதியாக நிலப்பயன்பாடு வகை மாற்றம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.**

**8) மாண்புமிகு மேயர், மரியாதைக்குரிய துணை மேயர், மண்டலத் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**

- ஈரோடு மாநகரில் கடும் போக்குவரத்து நெரிசல் உள்ளது. அனைத்துப் பேருந்துகளும் மத்திய பேருந்து நிலையத்திற்கு வந்து செல்ல வேண்டியுள்ளதால், பேருந்து நிலையத்திலும், சாலைகளிலும் போக்குவரத்து நெரிசல் காரணமாக பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் சரியான நேரத்தில் தங்களது இடத்திற்கு செல்ல இயலாமல் போகிறது. ஆகவே இந்த இடர்பாடுகளை களையும் வண்ணம் 1. சோலார் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பேருந்து நிலையம் ஒன்றும், 2. சூரியம்பாளையம் பகுதியில் மற்றொரு புறநகர் பேருந்து நிலையம் அமைத்துதர வேண்டி தமிழக அரசுக்கு கருத்துரு அனுப்ப இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ஈரோடு மாநகராட்சி கடைகளுக்கு பெயர் மாற்றம் செய்ய செலுத்தப்பட வேண்டிய பெயர் மாற்ற கட்டணம் மற்றும் வைப்புத் தொகை (24 மாதத்திற்கானது) ஆகியவற்றை ஆரம்பத்தில் ஏலம் எடுத்த அனுபோகதாரர்கள் செலுத்திய வைப்பு தொகைகளுக்கு சரி செய்து கொண்டு பெயர் மாற்றம் செய்வது என இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**190.** **மாண்புமிகு மேயர் முன்மொழிய மரியாதைக்குரிய துணை மேயர் அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**9) 3–வது மண்டலத் தலைவர் திரு. இரா. மனோகரன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**

- மண்டலம் **3–**ற்கு அவசர அவசியம் கருதி மண் தோண்டும் இயந்திரம் (ஜே.சி.பி) ஒன்று வாங்கிட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**191.** **3**ஆவது மண்டலத் தலைவர் இரா. மனோகரன் அவர்கள் முன்மொழிய **1**ஆவது மண்டலத் தலைவர் ஆர். முனியப்பன் அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் மண்டலம் 1,2,4 ஆகியவைகளுக்கும் தலா 1 ஜே.சி.பி வாங்க தீர்மானிக்கப்பட்டது.

**இடம்- ஈரோடு** **மேயர்,**

**நாள்- 17.08.2015** **ஈரோடு மாநகராட்சி**